# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள்: 19.04.2022

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

**ஐயா, வணக்கம்**

**பொருள் :** **வாரிய ஆணை எண்** (Per) FB TANGEDCO Proceedings No.2, Dated 12th April 2022 **ரத்து செய்ய கோருவது - தொடர்பாக**

**பார்வை :** 1. GO MS No. 248 FINANCE(MPC) Department dt 20.05.2020
2. (Per)F.B. TANGEDCO Proceedings No.21 Dated 23.07.2020

வாரிய ஆணை எண் 2, நாள் 12.04.2022, மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் நலன்களுக்கு எதிராகவும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் இருப்பதால் இந்த வாரிய உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என முதலில் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

பார்வை ஒன்றில் கண்ட அரசாணை வாயிலாக கொரானா நோய் தொற்று காலத்தில் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு அரசின் துறைகளில்/ நிறுவனங்களில் புதிய பதவிகளை உருவாக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து வாரிய ஆணை 21 நாள் 23.07.2020-ன் மூலம் மின்வாரியத்திலும் வேலை பளு ஒப்பந்தத்தின் மூலம் வராத இடங்களுக்கு இந்த உத்தர்வை அமல்படுத்தியது வாரிய நிர்வாகம். தற்போது வழங்கப்பட்ட வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022 மூலமாக நிதிச்சுமையை காரணம் காட்டி 23 வழிகளில் நடைமுறையில் பெற்று வந்த உரிமைகளை வாரிய நிர்வாகம் இந்த உத்தரவின் மூலம் பறித்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 01.07.1957-ல் உருவாக்குவதற்கு முன்பு தமிழக அரசின் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 01.07.1957-ல் மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு என மாற்றம் செய்யப்படுகின்ற பொழுது அரசு ஆணை G.O.MS. No. 538 PWED dated 25.02.1958 மற்றும் B.P No. 445 நாள் 26.04.1958 மூலம் இடைநிலை விதிமுறைகள் (TRANSITORY REGULATIONS) உருவாக்கி ஊழியர்களின் நல்வாழ்விற்கு வழிவகுத்தது.

அதன்படி ...

## TRANSITORY REGULATIONS

1. The Said staff shall continue to be governed by the same service rules and regulation as were applicated to them under the Govt. of Madras prior to the 1st July 1957 until corresponding service rules and regulations are framed by the Board under sub-Section (c) section 79 of the Electricity (Supply) Act 1948 (Central Act LIV of 1948.

2. The Said staff who were in Govt. Service till 30.06.1957 and who have opted to serve under the Board from 1.7.57, shall continue to enjoy the service conditions under the Govt. Whenever any change therefor is given effect to be the Board.

3. All orders passed by the Government of Madras in relation to the said staff, on and after the 1st July 1957 shall be deemed to be lawful orders passed by the Board and shall have effect accordingly.

என குறிப்பிட்டுள்ளதை தற்போது உள்ள மின்வாரிய அலுவலர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என கருதுகின்றோம்.

அதே போல கடந்த 01.12.1996 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தம் 08.07.1998 அன்று ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் DEARNESS ALLOWANCE என்ற தலைப்பின் கீழ்

The Dearness Allowance Rates will be revised twice in a year On 1st January and 1st July Taking into account the Variations in the ~~Perivious~~ Previous twelve Months Avearage All India consumer Price Index Numbers adopting the same formula as followed by the State Government.

மேலும் பணி ஓய்வுபெற்றவர்களுக்கு...

The Revised Pension scheme of the Government of Tamilnadu and any amendment there on from time to time will be applied to the Pensioners of the TNEB என குறிப்பிட்டுள்ளதையும் தற்போது உள்ள வாரிய நிர்வாக அலுவலர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதே போல மின்வாரிய மறுசீரமைப்பு தொடர்பாக G.O.MS. No. 100 dated 19.10.2010 உத்தரவை எதிர்த்து ஒரு சங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த பொழுது அந்த வழக்கில் மின்வாரிய நிர்வாகத்தால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணபத்திரத்தில் தற்போது உள்ள பணி நிலைகளிலும் , பணி விதிகளிலும் தற்போது உள்ள நிலையே தொடரும் என்றும், பணியாளர்களின் பதவி உயர்வு, புதிய பணி நியமனம், உள்முக தேர்வு, விருப்ப மாறுதல், விடுப்புகள், அனைத்து அலவனஸ்கள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒய்வூதியம், குடும்ப ஒய்வூதியம், ஒய்வு/ இறப்பு பணப்பயன்கள் அதாவது கிராஜிட்டி, சரண் விடுப்பு,பொது வருங்கால வைப்பு நிதி, காலமுறை பஞ்சப்படி உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்கண்ட விவரங்களை கணக்கில் கொள்ளாமல் வாரிய உத்தரவு எண் 2, நாள் 12.04.2022, வெளியிடப்பட்டிருப்பது இயற்கை நீதிக்கு எதிரானதாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மின்வாரியத்தின் நிதி இழப்பிற்கு பணியாளர்கள் எந்த வகையிலும் காரணம் அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கடந்த 2020-21-ம் ஆண்டில் மின்வாரியத்தின் மொத்த வருமானம் ரூ.63,388.52 கோடி செலவினமாக ரூ.76,795.84 கோடி, அதாவது வருவாய்க்கும் செலவிற்கும் வித்தியாசம் ரூ.13,407.37 கோடியாக இழப்பாக அமைந்துள்ளது. இதில் ஊழியர்கள் நலன் ஒய்வூதியம் உட்பட செலவு செய்த தொகையாக ரூ. 9144.15 கோடி என குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வருவாயில் 14.42 சதவீதம் மட்டுமே.ஆனால் மொத்த வருவாயில் 75.7 சதவீதத்திற்கு அதாவது ரூ.47,987.89 கோடிக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்ததன் விளைவு வாரியம் மிகப்பெரிய நிதி இழப்பிற்கு உள்ளாகி உள்ளது.

எனவே தான் நமது மின் உற்பத்தியை முழுவீச்சில் உற்பத்தி செய்தாலே இந்த செலவை சரிகட்ட முடியும். தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி, தொழிற்சங்கங்கள் தரும் ஆலோசனையை கணக்கில் கொண்டாலே நிதி ஒழுகலை தடுக்க முடியும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து தற்போது வெளியிடப்பட்ட வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022-ஐ ரத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

19/4/2022

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய இன்ஜினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்


ROBIN SHARMA

